## நீதி நிருவாகம் அறிவிப்புகள் 2008 – 2009

**I.** உயர்நீதிமன்றம் அரசுக்கு அனுப்பியுள்ள செயற் குறிப்புகளை பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும், மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகளின் அடிப்படையிலும்,

பின்வரும் இடங்களில் நீதிமன்றங்களுக்கான கட்டடங்களும், தேவையின் அடிப்படையில் அங்குள்ள நீதிபதிகளுக்கான குடியிருப்புகளும் கட்டப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | ஆம்பூர் | – வேலூர் மாவட்டம் |
| 2. | தென்காசி, வள்ளியூர் | – திருநெல்வேலி மாவட்டம் |
| 3. | திருச்செந்தூர் | – தூத்துக்குடி மாவட்டம் |
| 4. | திருமயம் | – புதுக்கோட்டை மாவட்டம் |
| 5. | பென்னாகரம் | – தருமபுரி மாவட்டம் |
| 6. | மேட்டுப்பாளையம் | – கோயம்புத்தூர் மாவட்டம் |
| 7. | பழனி | – திண்டுக்கல் மாவட்டம் |
| 8. | காங்கேயம், பவானி | – ஈரோடு மாவட்டம் |
| 9. | திருச்செங்கோடு, ராசிபுரம் | – நாமக்கல் மாவட்டம் |
| 10. | பத்மநாபபுரம் | – கன்னியாகுமரி மாவட்டம் |
| 11. | உத்தமபாளையம் | – தேனி மாவட்டம் |
| 12. | குளித்தலை | – கரூர் மாவட்டம் |
| 13. | திருவையாறு | – தஞ்சாவூர் மாவட்டம் |
| 14. | கள்ளக்குறிச்சி, திண்டிவனம் | – விழுப்புரம் மாவட்டம் |
| 15. | சங்ககிரி, ஆத்தூர் | – சேலம் மாவட்டம் |
| 16. | அரக்கோணம் | – வேலூர் மாவட்டம் |
| 17. | திருச்சி | – திருச்சி மாவட்டம் |

**II.** மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் செயற் குறிப்புகளை ஏற்று அதிக வழக்குகள் நிலுவையில் உள்ளதின் அடிப்படையிலும், நிதி நிலைமைக்கு ஏற்பவும், இந்த ஆண்டு 25 புதிய நீதிமன்றங்கள் தொடங்கப்படும்.

1. சென்னையில் இரண்டு, மதுரையில் ஒன்று ஆக, போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்பு (NDPS) சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கான 3 தனி நீதிமன்றங்கள்.

2. வாணியம்பாடி, தாம்பரம், தேனி மற்றும் அரூர் ஆகிய இடங்களில் சார் நீதிமன்றம் (Sub Court)

3. குன்னூர், அம்பத்தூர், திருவெற்றியூர், பல்லடம், அவிநாசி, முதுகுளத்தூர், சிவகாசி மற்றும் பாலக்கோடு ஆகிய இடங்களில் மாவட்ட தனி உரிமையியல் நீதிமன்றங்கள் (Munsif Court)

4. திருச்செங்கோடு, ஆலந்தூர் மற்றும் திட்டக்குடி (கடலூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் (Addl. District Munsif Court)

5. பண்ருட்டி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் கூடுதல் குற்றவியல் நீதிமன்றங்கள் (Addl. Judicial Magistrate)

6. திருப்பூர், கரூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் கூடுதல் சார்பு நீதிமன்றம் (Addl. Sub Court)

7. காட்பாடியில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் (District Munsif cum Judicial Magistrate Court)

8. சங்கராபுரத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் (District Munsif Court)

III. <u>முகாம் நீதிமன்றங்கள்</u> (Camp Court) :-

உயர்நீதிமன்றத்தின் செயற்குறிப்பினை ஏற்று பரீட்சார்த்த முறையில் முகாம் நீதிமன்றங்கள் (Camp Court) தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. புதிதாக சார்பு நீதிமன்றங்கள் தொடங்குவதற்கு பதிலாக பக்கத்திலுள்ள சார் நீதிபதி (Senior Division) இந்த இடங்களுக்கு சென்று முகாம் நீதிமன்றங்கள் நடத்த ஆணை பிறப்பிக்கப்படும்.

இந்த ஆண்டு மேலூர், திருமங்கலம், உசிலம்பட்டி, கொடைக்கானல் மற்றும் அரக்கோணம் ஆகிய இடங்களில் ரூ.8.18 லட்சம் செலவில் இதுபோன்று முகாம் நீதிமன்றங்கள் (Camp Court) தொடங்கப்படும்.